மண்டகொளத்தூர் ஊராட்சி மன்ற தலைவர்/நிர்வாக அலுவலர்

செயல்முறைகள்.

முன்னிலை: திருமதி.அ.குமாரி.,

வீட்டு மனைப்பிரிவு அங்கீகார எண்.1/2024/காசிநகர் பகுதி, நாள்: 03/2024.

பொருள் : வீட்டுமனைப்பிரிவு அங்கீகாரம் – திருவண்ணாமலை மாவட்டம் – சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம் மண்டகொளத்தூர் ஊராட்சி – புன்செய் சர்வே எண்.343/2B1, புன்செய் சர்வே எண்.343/2B2, புன்செய் சர்வே எண்.840/2A1A, புன்செய் சர்வே எண்.840/2A2 மற்றும் புன்செய் சர்வே எண்.840/2B3 ஆகிய புல எண்களில் ஹெக்டேர் 0.98.25 ஏர்ஸ்க்கு ஏக்கர் 2.42 1/2 சென்ட் இடத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள "ஸ்ரீ செந்தூர்வேலன் நகர் பேஸ்–1" வீட்டுமனை பிரிவு செய்யப்பட்டுள்ளதை – அங்கீகாரம் செய்து உத்திரவிடல் – சார்பு.

பார்வை :

1. திரு.இரா.கார்த்திகேயன் த/பெ இராமசாமி, கதவு எண்.427, சத்யாநகர், தீத்தாண்டப்பட்டு கிராமம் என்பவருடைய மனு நாள்:22.02.2024.
2. இணை இயங்குநர்/துணை இயக்குநர் /உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் செயல் முறைகள் ROC No.DUNCCJEQ/2023/TCP, நாள்: 02.11.2023.
3. மாவட்ட நகர் வடிவமைப்பு ம.வ/ மா.ந.ஊ.உ.இ (தி.மலை) எண்.252/2023. நாள்: 02.11.2023.
4. மனைப்பிரிவு அனுமதிக்காக நில மதிப்பு கூட்டுத்தொகையில் 3 % மற்றும் தனிமனை கட்டணம் செலுத்திய நாள்: 08.03.2024.
5. பொது பயன்பாட்டிற்கான சாலைகள் / மின்மாற்றி அமைக்க / பொது பயன்டிற்கான இடத்திற்கான ஆவண எண்.3968/2023. நாள்: 12.10.2023.
6. பொது உபயோகத்திற்கான நாமினல் தான பத்திரம் ஆவண எண்.3967/2023. நாள்: 25.10.2023.
7. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) சேத்துப்பட்டு அவர்களின் ந.க.ஊ.அ3/195/2020, நாள்: 16.02.2024.
8. மண்டகொளத்தூர் ஊராட்சி மன்ற தீர்மான எண். 11/2024, நாள்: 11/03.2024.

(த.பி.பா)

உத்திரவு:-

சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம் மண்டகொளத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட - புன்செய் சர்வே எண்.343/2B1, புன்செய் சர்வே எண்.343/2B2, புன்செய் சர்வே எண்.840/2A1A, புன்செய் சர்வே எண்.840/2A2 மற்றும் புன்செய் சர்வே எண்.840/2B3 ஆகிய புல எண்களில் ஹெக்டேர் 0.98.25 ஏர்ஸ்க்கு ஏக்கர் 2.42 1/2 சென்டிற்கு திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் 252/2023 நாள்.02.11.2023-ன் படி இசைவு அளிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள "ஸ்ரீ செந்தூர்வேலன் நகர் பேஸ்-1" மனைப்பிரிவை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அங்கீகாரம் செய்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1) பார்வை 2-ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட நகர்புற ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களினால் இசைவு அளிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளபடி அமைக்கப்பட்ட மனையினை எவ்வித மாற்றமும் செய்யாமல் விற்பனை செய்யப்பட வேண்டும்.

2) பார்வை 5 மற்றும் 6-ல் கண்ட ஆவணங்களில் காணும் இடங்களை மனைபெறுவோர் ஆக்கிரமிப்பு செய்ய கூடாது என்பதை அவர்கள் அறியும் பொருட்டு இச்செயல்முறை ஆணையின் நகலினை மனை பெறுவோர்களுக்கு அளிக்க வேண்டும்.

3) வீட்டுமனை பெறும் நபர்கள் தங்கள் பெற்ற மனையில் புதிய வீடு அரசு ஆணை நிலை எண்.255 ஊரக வளர்ச்சி துறை (C2) நாள்:18.08.1997 ன்படி புதிய வீடு கட்ட வரைபட அங்கீகார கட்டணம் செலுத்தப்படவேண்டும்.

4) பார்வை 2-ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட நகர்புற ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில் சிறப்பு நிபந்தனையில் 'ஆ' வில் கண்டுள்ள அனைத்து இனங்களும் முழுமையாக முடிக்க மனைப்பிரிவு அமைத்தவர் கட்டுப்பட்டவர் ஆவார்.

தலைவர்
மண்டலக்கோட்டம்

பெறுநர்.

திரு.இரா.கார்த்திகேயன் த/பெ இராமசாமி.,
கதவு எண்.427, சத்யாநகர், தீத்தாண்டப்பட்டு கிராமம்,
செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

நகல் :

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
   ஊராட்சி ஒன்றியம்,
   சேத்துப்பட்டு அவர்களுக்கு பணிந்தனுப்பபடுகிறது.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ), செய்யார்,
   அவர்களுக்கு பணிதனுப்பபடுகிறது.
3. உதவி இயக்குநர் நகர்புற ஊரமைப்பு வடிவமைப்பு திருவண்ணாமலை
   அவர்களுக்கு பணிந்தனுப்பபடுகிறது.